# மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 02 சனிக்கிழமை 19.08.2023 அதிர்வு 19


## மீண்டும் ஊருடன் உரையாட களமிறங்குகின்றது மொட்டு

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை இலக்கு வைத்து நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளது.

கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் நாளைய தினம் விசேட 04

## சு.க. ஆண்டு விழா கொழும்பில் சந்திரிகாவுக்கும் அழைப்பு!



ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டுக்கு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரை அழைப்பதற்கு அக்கட்சியின் செயற்பாட்டாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 72 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் செப்டெம்பர் 04

## 13ஆம் திருத்தத்தை எதிர்க்க மொட்டுக்கு உரிமை இல்லை

### நிமல் லன்சா சுட்டிக்காட்டு



”அதிகாரப்பகிர்வு தொடர்பில் இரட்டை நிலைப்பாட்டைக் கொண்டுள்ள ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு, அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை 04

## யாழ். செம்மணியில் கோர விபத்து

### கணவன் சாவு; மனைவி படுகாயம்



யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற கோர விபத்தில் கணவன் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். மனைவி படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளும் தண்ணீர் தாங்கி வாகனமும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம் – ஏ 9 பிரதான வீதியின் செம்மணி வளைவுக்கு அண்மையில் இன்று நண்பகல் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. 04



# தேசியப் பாதுகாப்பை மீளாய்வு செய்ய முடிவு

### ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

கொழும்பு,ஓகஸ்ட்19

**”நாட்டின் தேசிய பாதுகாப்பு தொடர்பான மீளாய்வொன்றை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம். இதன்போது புதிய பொருளாதாரப் போக்குகளைப் போன்றே காலநிலை மாற்றம் உள்ளிட்ட அனைத்து காரணிகள் குறித்தும் கவனம் செலுத்தப்படும்.”** 04

## ரூ.நாலரைக் கோடி பெறுமதி கஞ்சா உடுத்துறையில் மீட்பு



யாழ்ப்பாணம், உடுத்துறைப் பகுதியில் இலங்கை கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 43 மில்லியனுக்கும் 04

## 4 பதவிகளைத் தவிர ஏனையவை ‘அவுட்’!

### ஐ.தே.கவுக்குள் அதிரடி மறுசீரமைப்பு

எக்சத் ஜாதிக பக்ஷய
ஐக்கிய தேசியக் கட்சி
UNITED NATIONAL PARTY

பிரதான நான்கு பதவிகளைத் தவிர கட்சியின் ஏனைய பதவி நிலைகளை இல்லாது செய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி நடவடிக்கை எடுத்துள்ளது என அறியமுடிகின்றது.

இதன்படி தலைவர், தவிசாளர், பொதுச்செயலாளர், பொருளாளர் ஆகிய பதவிகள் மாத்திரமே இருக்கும். பிரதித் தலைவர், உப தலைவர், தேசிய அமைப்பாளர் உள்ளிட்ட பதவிகள் நீக்கப்படும்.

இதற்குப் பதிலாக மேற்படி பதவிகளை வகித்தவர்கள் உட்பட கட்சியின் சிரேஷ்ட 04

# இன ஒற்றுமையை ஏற்படுத்தும் இடமாக சனசமூக நிலையங்கள் விளங்கும்

## அச்சுவேலி மத்திய சனசமூக நிலைய அடிக்கல் நடும் நிகழ்வில் நிரோஷ்



கிராமங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் புலம்பெயர்ந்தவர்களும் தாயகத்தில் வாழ்பவர்களும் ஒன்றிணைந்து பயணிப்பது இனத்தின் நலன்களை மையப்படுத்திய உத்தியாகும்.

இவ்வாறு வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்தார்.

அச்சுவேலி மத்திய சனசமூக நிலையத்துக்கு அடிக்கல் நாட்டும் வைபவம் இன்று வெள்ளிக்கிழமை (18) காலை நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு–

எமது மண்ணில் நல்ல பல மாற்றங்களுக்கு அடிப்படையாக கிராம அமைப்பை வலுப்படுத்தவேண்டிய தேவையுள்ளது.

எமது கிராம கட்டுமானங்களின் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்காக நிலத்திலும் புலத்திலும் வாழும் உறவுகள் கைகோர்த்து கிராமம் என்ற வகையில் அபிவிருத்திகளை முன்னெடுப்பது அவசியமாகவுள்ளது.

ஒரு கிராமத்தின் ஒருங்கிணைவு சனசமூக நிலையங்களிலேயே தங்கியுள்ளது. சனசமூக நிலையத்தின் ஒருங்கிணைவு இனத்தின் ஒருங்கிணைவாக அமைகின்றது. போரின் தாக்கம் காரணமாக எம்மில் இலட்சக்கணக்கானோர் புலம்பெயர்ந்துவிட்டனர். இது உள்நாட்டில் எமது ஜனநாயக பலத்தினைப் பாதித்துள்ளது.

இந்த நிலையில் மேலுமொரு கோணத்தில் புலர்பெயர்ந்தோரின் வளத்தை எவ்வாறாக எமது அரசியல் பொருளாதார, கலாச்சார, சமூக இருப்புக்காகத் தக்கவைக்க முடியும் என்பதை இனம் சார்ந்த அக்கறையுடன் சிந்தித்து செயற்படுத்த வேண்டும்.

அவ்வாறான அறிவார்த்தமான முயற்சிகளில் ஒன்றே இன்று இந்த அச்சுவேலி மண்ணில் நிறைவேறியுள்ளது. ஒரு சனசமூக நிலையம் கிராமத்தின் கட்டமைப்பினை தக்கவைக்கும் நிலையம் என்ற அடிப்படையில் கல்வி, பொருளாதாரம் என சகல அம்சங்களிலும் முன்னிலையில் உள்ள இக் கிராமத்தில் தொடந்து மேம்பாட்டை தக்கவைப்பதற்கு இந்த நிலையம் அடிப்படையாக அமையும்.

பொதுவாக புத்திஜீவிகள் பொதுப் பணிக்கு வருவதில்லை என்பது பரவலான குற்றச்சாட்டு. இச் சூழ்நிலையில் இங்கு எழுத்தாளரும் சமூக செயற்பாட்டாளருமான அருண் செல்லப்பா போசகராக சனசமூக நிலையத்தை நிலத்திலும் புலத்திலுமாக ஒருங்கிணைக்கின்றார். அதுபோன்று இந்த ஓய்வுபெற்ற கல்வி அதிகாரி வேலுப்பிள்ளை பாலசுப்பிரமணியம் தலைமை தாங்குகின்றார். செயலாளராக நடேசு இரவீந்திரன், பொருளாளராக யாழ்ப்பாண பல்கலைக்கழக விலங்கியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சிவகுமார் பிரதீபா என ஓர் கல்விப்புலம் பொதுப்பணி களத்தில் நிற்கின்றமை மகிழ்ச்சிக்குரியது.

இந்த நிலையத்தின் ஏனைய செயற்பாட்டாளர்களும் பல்துறை சார்ந்தவர்களாக இருக்கின்றனர். கல்வியாளர்கள் சமூக செயற்பாடுகளில் இருந்து ஒதுங்கும் துர்ப்பாக்கிய நிலையில் இவ்விடயம் ஏனைய படித்தவர்களுக்கு முன்னுதாரணமாக அமைய வேண்டும் என இங்கு கோடிட்டுக்காட்டுகின்றேன்.–என்றார்.

# ஆக்கத்திறன் விருதுகளுக்கு மாவட்ட மட்ட போட்டி



(பழுவூரான்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் 2022 – 2023 தேசிய ஆக்கத்திறன் விருதுகளுக்கான மாவட்ட மட்ட போட்டிகள் மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி கலாமதி பத்மராஜாவின் வழிகாட்டுதலின் கீழ் மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கே.குணநாயகத்தின் ஒழுங்கமைப்பில், பிரதேச கலாசார உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் மட்டக்களப்பு மகாஜனாக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை (19) இடம் பெற்றன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமானின் 200 ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு பல போட்டிகள் இடம்பெற்றன.

இந்துக்களின் கலை கலாசார பாரம்பரிய விழுமியங்களை பறைசாற்றும் வகையில் மாணவ மாணவிகள் தங்களது திறமைகளை வெளிக்காட்டினர்.

இதன் போது வில்லுப்பாட்டு, கதாப்பிரசங்கம், பேச்சு, பண்ணிசை பாரத நாட்டியம், நாடகம், நீதி நூல் ஒப்புவித்தல் போன்ற பல போட்டிகள் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.




# சித்த மருத்துவ பீட அங்குரார்ப்பண நிகழ்வு



**(அபு அலா)**

திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு, சித்த மருத்துவ பீடமாக தரமுயர்த்தப்பட்டதையடுத்து, அதை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று (18) திருமலை வளாக சித்த மருத்துவ பீடத்தில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு திருகோணமலை வளாக முதல்வர் பேராசிரியர் ச.தேவதாசன், கிழக்கு மாகாண சுகாதார சுதேச அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன், கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதர், சித்த மருத்துவ பீட பதில் பீடாதிபதி பேராசிரியர் சோ.சுதர்சன் மற்றும் துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பல உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

சித்த மருத்துவத்தின் தந்தையாக இருக்கும் அகஸ்த்திய முனிவரின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு, சர்வமத அனுஷ்டானங்களுடன் இடம்பெற்றது.

இதன்போது, சித்த மருத்துவத்தின் தோற்றம் பற்றியும், திருகோணமலை வளாக சித்த மருத்துவ அலகு எவ்வாறு ஆரம்பிக்கப்பட்டது, அதன் வளர்ச்சிப் படிகள் என்ன? இன்று பீடமாக தரமுயரக் காரணமானவர்கள் யார் என்பது பற்றியும் கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.





OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS

CENTRALPAR JA-ELA
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தேசியப் பாதுகாப்பை...

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதற்காக மேஜர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) சன்ன குணதிலக்க தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது எனவும், அதன் அறிக்கை கிடைத்த பின்னர் தேசிய பாதுகாப்பு சபையின் நவீன பாதுகாப்பு கொள்கைகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இலங்கை கடற்படையின் தொண்டர் படையணிக்கு ஜனாதிபதி வர்ணம் சூட்டும் நிகழ்வு நேற்று (18) மாலை பூஸா கடற்படை உயர் பயிற்சி நிலையத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தற்போதைய சவால்களை ஆயுதங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்த முடியாது எனவும், அவற்றை எதிர்கொள்ளும் வகையில் உயர் திறன்கள் மற்றும் நவீன தொழில்நுட்ப அறிவு கொண்ட பாதுகாப்புப் படையைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அத்துடன், பாதுகாப்புப் படையினரின் நலன் மற்றும் ஓய்வுக்காலத்தைப் பாதுகாப்பதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது எனவும், புதிய தேசிய பாதுகாப்பு மீளாய்வில் இதனை உள்ளடக்க எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பூஸா கடற்படை பயிற்சி நிலையத்திற்கு வருகை தந்த முப்படைகளின் தளபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா மற்றும் தொண்டர் படையணியின் கட்டளைத் தளபதி ரியர் அத்மிரல் தம்மிக குமார ஆகியோர் வரவேற்றனர்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு விசேட இராணுவ அணிவகுப்பு மரியாதை வழங்கப்பட்டதுடன் ஜனாதிபதி அணிவகுப்பைப் பார்வையிட்டார்.

இலங்கை கடற்படையின் தொண்டர் படையணிக்கு ஜனாதிபதி வர்ணம் சூட்டியதுடன், வர்ணக் கொடிகளும் ஜனாதிபதியால் கையளிக்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற வர்ணமயமான கண்காட்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பார்வையிட்டார்

இந்த நிகழ்வில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோன், தென் மாகாண ஆளுநர் விலி கமகே, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் (ஓய்வுபெற்ற) கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவிநிலைப் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா, கடற்படைப் பதவிநிலைப் பிரதானி ரியர் அத்மிரல் ஜெயந்த குலரத்ன, தொண்டர் படையணியின் பிரதானி ரியர் அட்மிரல் தம்மிக்க குமார மற்றும் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### யாழ். செம்மணியில்...

சம்பவத்தில் கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியைச் சேர்ந்த புவனேஸ்வரன் மனோஜ் (வயது – 31) என்ற குடும்பஸ்தர் உயிரிழந்துள்ளார்.

மன்னாரைச் சேர்ந்த அவரது மனைவி துரைராஜ் முகுந்தினி (வயது –26) படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

### 4 பதவிகளைத் தவிர

உறுப்பினர்களை உள்ளடக்கிய வகையில் அதியுயர் அதிகார குழுவொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கேற்ற வகையில் கட்சியின் யாப்பு மறுசீரமைக்கப்படவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆண்டு விழா எதிர்வரும் செப்டெம்பர் 10 ஆம் திகதி கட்சித் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கொண்டாடப்படவுள்ளது. இதன்போது கட்சியின் புதிய யாப்புக்கும் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

### சு.க. ஆண்டு விழா...

2 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது.

இதற்கான நிகழ்வை குருநாகலையில் நடத்துவதற்கு அக்கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர நடவடிக்கை எடுத்திருந்த நிலையில், அரசு பக்கம் உள்ள சுதந்திரக் கட்சிக் குழு கொழும்பில் நிகழ்வை நடத்துவதற்குத் தயாராகி வருகின்றது. கட்சியின் ஐக்கியம் கருதி இதற்கு மைத்திரிபால சிறிசேன அனுமதி வழங்கியுள்ளார்.

எனவே, கொழும்பில் நடைபெறவுள்ள கட்சி மாநாட்டுக்கு அக்கட்சியின் ஆலோசகரான சந்திரிகா அம்மையாரை அழைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### 13ஆம் திருத்தத்தை...

நடைமுறைப்படுத்தி நாட்டிலுள்ள அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுக்கும் போது அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்குத் தார்மீக உரிமை இல்லை.”

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நிமல் லன்சா தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

“13 இற்கு அப்பால் அதிகாரப் பகிர்வு பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட வேண்டும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ கடந்த காலங்களில் தெரிவித்திருந்தார்.

13ஆவது திருத்தம் தற்போதும் அரசமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதன் கீழ் அனைத்து அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களைப் பெற்று நாட்டின் அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அதிகாரப் பகிர்வை தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கும்போது, பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் அதற்கு எதிராகக் கருத்து வெளியிட்டதன் மூலம் நாட்டின் முன் அவர்களின் இரட்டை நிலைப்பாட்டை தெளிவாகக் காண்பித்துள்ளது.

ஸ்திரமான பொருளாதாரத்தையும் ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்கு நாட்டின் அனைத்து மக்களுக்கும் இடையில் சமாதானமும் நல்லிணக்கமும் கட்டியெழுப்பப்பட வேண்டும்.

நாட்டு மக்கள் அனைவர் மத்தியிலும் நம்பிக்கையை வளர்க்கும் வகையில், அனைவரும் ஏற்கும் வகையில் அதிகாரப் பகிர்வு வழங்கப்பட வேண்டும். இதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்து தரப்பு மக்களும் பங்களிக்க முடியும்.

அப்போது சகல மக்கள் மத்தியிலும் இலங்கையர் என்ற உணர்வு கட்டியெழுப்பப்படும். அனைத்து மக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடியவாறு அதிகாரப் பகிர்வை வழங்குவதன் மூலம் சர்வதேச நம்பிக்கையையும் கட்டியெழுப்ப முடியும்.

இது தொடர்பான புரிதல் சிறிதளவும் இன்றி, பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாட்டுக்கும், மனசாட்சிக்கமைய செயற்படும் பொதுஜன பெரமுனவின் ஏனைய உறுப்பினர்களது நிலைப்பாட்டுக்கும் முரணான கருத்தைப் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் எந்த அடிப்படையில் தெரிவிக்கின்றார் என்பதை அவர் தெளிவுபடுத்த வேண்டும்.” – என்றார்.

### மீண்டும் ஊருடன்...

நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாம் ஜனாதிபதியாக பதவி வகித்த காலத்தில் ‘ஊருடன் கலந்துரையாடல்’ என்னும் பெயரில் ஓர் திட்டத்தை ஆரம்பித்திருந்தார்.

இந்த திட்டத்தின் நீட்சியாக நாளை முதல் ஊர்களுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடும் திட்டமொன்றை கட்சி ஆரம்பிக்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது கட்சிக்கு புதிய உறுப்பினர்களை சேர்த்தல், குழுக்களையும் அமைத்தல், கிராமங்களில் காணப்படும் பிரச்சினைகளைக் கண்டறிதல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த நடவடிக்கைகளை ஒருங்கமைப்பு செய்வதற்காக ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### ரூ. நாலரைக் கோடி...

அதிகப் பெறுமதியான கேரள கஞ்சாவுடன் நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாடளாவிய ரீதியிலுள்ள கரையோர பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் கடற்படையினர் தொடர்ச்சியாக விசேட ரோந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் அதன் ஒரு கட்டமாக இந்த தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. வடக்கு கடற்படையினர் யாழ்ப்பாணம் வெற்றிலைக்கேணி, உடுத்துறைக்கு அண்மித்த கடல் பகுதியில் இந்த தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட சமயம் படகொன்றில் இருந்து இந்தக் கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

130 கிலோ 600 கிராம் (ஈரமான நிலையில்) கேரள கஞ்சா மீட்கப்பட்டது. அவை 61 சிறு பொதிகளாக பொதி செய்யப்பட்டு 03 சாக்குகளில் அடைக்கப்பட்ட நிலையில் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் கஞ்சாவக் கடத்துவதற்கு முயன்றவர் என்று கூறப்படும் சந்தேக நபர் ஒருவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 44 வயதுடையவர் என்றும் அவர் யாழ்ப்பாணம், உடுத்துறையைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த பெறுமதி நான்கு கோடி முப்பது லட்சம் ரூபாவுக்கு அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கேரள கஞ்சா மற்றும் டிங்கி படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



# நீர் தொடர்பான மைமல் பொழுது உரையாடல்

வடமாகாண நீர் உரையாடல் வட்டம், இளைய நீர்துறைமை யாளர் வடக்கு வட்டம் மற்றும் யாழ்ப் பாணவிஞ்ஞானசங்கம் இணைந்து நடத்தும் மைமல் பொழுது உரை யாடல் தொடரின் அமர்வு 24 எதிர்வரும் ஓகஸ்ட் 23 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 4.30 தொடக்கம் 6 மணி வரை பல்கலைக் கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

முனைவர் ஜோகேஷ் ஜடேஜா இதில் வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார். உரையாடல் தொடரில், 'அளவிடல் கண்காணித் தல் மூலம் நிலத்தடி நீர் வளம் பேணலில் மக்கள் மைய நடவடிக் கைகள், இந்திய அனுபவங்கள்' எனும் தலைப்பில் உரையாடல் இடம்பெறவுள்ளது.

வளவாளர் முனைவர் ஜோகேஷ் ஜடேஜா, மார்பி எனப்படும் நீர் தொடர் பான செயல் திட்டத்தின் ஊடாக இந்திய குஜராத் ராஜஸ்தான் மாநிலங்களில் ஐந்து ஆண்டு களாக முன் நின்று வழிநடத்தி மக்கள் ஈடுபாட்டை வளர்த்தெடுத்த சாதனையாளர் ஆவார்.

நிகழ்வில் கலந்து கொள்ள 07734 23 576 என்னும் தொலை பேசி இலக்கம் ஊடாகத் தொடர்பு கொண்டு வரவை உறுதிப்படுத்து மாறு ஏற்பாட்டாளர்கள் குறிப்பிட் டுள்ளார்.

# காணாமல்போன வர்த்தகர் கண்டுபிடிக்கப்பட்டார்!

காணாமல்போனார் எனக் கூறப்பட்ட கொலன்ன வர்த்தகர் நேற்று வெள்ளிக்கிழமை இரவு மிரிஹான பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிரிஹானை பகுதியில் உள்ள அவரது நண்பரின் வீட்டில் பதுங்கியிருந்தபோது அந்த வர்த்தகர் பொலி ஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மாத்தறை தெனியாய பகுதியில் உள்ள வங்கி ஒன்றில் இருந்து 10 லட்சம் ரூபா பணத்தை பெற்றுக்கொண்டு வான் ஒன்றில் வீடு திரும்பிக் கொண்டிருந்த நிலையில்அந்த வர்த்தகர் காணா மல்போயிருந்தார்.

இது குறித்து வர்த்தகரின் மனைவி கொலன்ன பொலிஸில் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கு அமைய விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டு விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், அந்த வர்த்தகர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வானின் சாரதி ஆசனத்தில் மிளகாய்த்தூள் வீசப்பட்ட நிலையில், வர்த்தகர் பயணித்த வான் கொலன்ன பனிங்கந்த பகுதியிலுள்ள பொது மயானத்திற்கு அருகில் நிறுத்தப்பட்டிருந்தமை ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

தேயிலை கொழுந்து சேகரிக்கும் வியாபாரத் தில் ஈடுபட்டு வந்த இந்த வர்த்தகர் கடந்த 16 ஆம் திகதி தெனியாய பகுதியில் உள்ள வங்கிக்கு சென்று பணத்தை எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வந்து கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் அணில்கந்த பிரதேசத்தில் வைத்து காணாமல்போயிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நூல் வெளியீட்டு விழா

**(எம்.எப். நவாஸ் )**

இலங்கையில் வாழும் முஸ்லிம் மக்களின் குடியியல் விவகாரங்களை நெறிப்படுத்தும் தனியார் சட்டமாகிய முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் சமகாலத்தில் முன்வைக்கப் பட்டு வருகின்ற வேளை முஸ் லிம் விவாக விவாகரத்து சட்ட திருத்தத்திற்கு பரிந்துரைக்கப் பட்டுள்ள முன்மொழிவுகளை இஸ்லாமிய நோக்குடன் தெளிவு படுத்தும் விதமாக கலாநிதி றவூப் ஸெய்ன் அவர்கள் எழுதிய "முஸ்லிம் விவாக விவாகரத்து சட்டம் – ஓர் இஸ்லாமிய நோக்கு" எனும் நூல் வெளியீடு நேற்று முன்தினம் (17) அக்கரைப்பற்று ஹல்லாஜ் வள நிலையத்தில் அனிஷா பிர்தவ்ஸ் தலைமை யில் இடம்பெற்றது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பேரவலத்துக்கான முன்னெச்சரிக்கை

நாடு எதிர்கொண்டிருக்கும் - எதிர்காலத்தில் மோசமாக எதிர்கொள்ளப் போகும் - பேரவல நிலைமை குறித்து அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் மீண்டும் எச்சரித்திருக்கின்றது.

சுகாதார ஊழியர்கள் நாட்டை விட்டு வெளியேறு வதால் ஏற்படும் உண்மையான பாதிப்பை அரசும் பொதுமக்களும் கண்டுகொள்ள சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும். அப்போது - சுகாதார அமைப் பில் விரிசல் தோன்றும் நேரத்தில் - நாட்டின் சுகா தார, மருத்துவத் துறைப் பாதிப்பு அல்லது சேதம் மீண்டெழுந்து வர முடியாததாக இருக்கும் என்று அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சமில் விஜேசிங்க தெரிவித்திருக் கின்றார்.

"குறைந்தது ஒரு வருடத்திற்கு முன்னரே மருத்து வர்கள் நாட்டை விட்டு வெளியேறத் தயாராகி வருகின்றனர் என எமது சங்கமும் மற்றும் ஏனைய தொழிற்சங்கங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை எச்சரித்துள்ளன" - என அவர் தெரிவித்தார்.

பொருளாதார நெருக்கடி நிலைமை தோன்றிய மையை அடுத்து மருத்துவர்களும் ஏனைய சுகாதார நிபுணர்களும் வெளிநாட்டு வேலைகளுக்கு விண் ணப்பிக்க ஆரம்பித்துள்ளனர் என்று நாடு முழுவ தும் உள்ள தமது அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கிளைகள் தெரிவித்தன என்பதை அவர் நினைவு படுத்தினார்.

மருத்துவமனைகளில் உள்ள பணியாளர் பற்றாக் குறையால் ஏற்கனவே பல புற மருத்துவமனைகள் முடங்கியுள்ளன என்றும் டாக்டர் விஜேசிங்க மேலும் கூறினார்.

"சுகாதார அமைச்சகம் சட்ட நடவடிக்கை எடுப்ப தாக அச்சுறுத்துவதன் மூலம் மருத்துவர்கள் மற்றும் பிற சுகாதார ஊழியர்களை பயமுறுத்த முயன்றது. சிலர் விமான நிலையத்தில் மருத்துவர்களை புலம் பெயர்வதை நிறுத்துவார்கள் எனவும் அச்சுறுத்தி னர். இந்த அச்சுறுத்தல்கள் வெளிப்படையாக வேலை செய்யவில்லை. ஹம்பாந்தோட்டை வைத் தியசாலையின் மயக்க மருந்து நிபுணர் எவருக்கும் தெரிவிக்காமல் வெளியேறிச் சென்றமை எல்லோ ருக்கும் தெரியும். அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டுப் பல்கலைக் கழகத்தில் இருந்து தகுதிபெற்று பெரிய மருத்துவமனையில் இணைந்தவர் இவர். அவர் ஏன் யாருக்கும் தெரிவிக்காமல் வெளியேறினார்?" - என்று டாக்டர் விஜேசிங்க கேட்டார்.

01 ஜூன் 2022 மற்றும் 31 மே 2023 க்கு இடையில் 842 மருத்துவர்களும் 274 நிபுணர்களும் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர். உள்ளகப் பயிற்சியை முடித்த சுமார் 250 பேர் தத்தமது நியமனங்களை ஏற்கவில்லை. சுமார் 30 அவசர சிகிச்சை நிபுணர்கள் இருந்தனர். இப்போது ஏழு பேர் மட்டுமே உள்ள னர். இது எங்கு செல்கிறது என்பது தெளிவாகக் காட்டுகின்றது - என்று அவர் சுட்டுவதில் அதிக விவகாரங்கள் புதைந்துள்ளன.

மருத்துவ - சுகாதார ஊழியர்களின் இடம்பெயர்வு குறித்து கவனம் செலுத்தப்படாவிட்டால், முக்கிய நகரங்களில் உள்ள சில மருத்துவமனைகளைத் தவிர, அரசு நடத்தும் பெரும்பாலான மருத்துவமனைகள் அடுத்த இரண்டு ஆண்டுகளில் மூடப்படும் என்ற அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் எச்ச ரிக்கை நேரப் போகும் பேரவலத்துக்கான அபாய மணி, ஆபத்து அலாரம்...!

## மருத்துவ அறிக்கைக்கு கூடுதல் தொகை பெற்றவருக்கு எதிராக வழக்கு தாக்கல்

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**



அம்பாறை மாவட்டத்தி லுள்ள மருத்துவ பரிசோ தனை நிலையம் ஒன்றில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட கூடுதலாக தொகைக்கு இரத்த மாதிரி பரிசோதனை அறிக்கை வழங்கிய இரு மருத்துவமனை உரிமை யாளர்களுக்கு எதிராகத் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு தலா ஒரு லட்சம் ரூபா தண் டப்பணம் அறவிடப்படப்பட் டுள்ளது.

அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக்க அபே விக்ரமவுக்கு கிடைத்த முறைப்பாடுகளை அடுத்து அம்பாறை மாவட்ட பாவனை யாளர் அலுவல்கள் அதி கார சபையின் புலனாய்வு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை யின் அம்பாறை மாவட்ட பொறுப்பதிகாரி எஸ்.என். எம்.சகலிய பண்டார இந்தத் தகவலைத் தெரிவித்தார் .

இவ்வாறு பாவனையாளர் களுக்கு எதிராகச் செயற்படு வோர் சம்பந்தமான முறைப் பாடுகளை 1977 என்ற இலக்கத்துக்கு அல்லது 0632222355 என்ற தொலைபேசி இலக்கத்துக் குத் தெரிவிக்குமாறு அறி விக்கப்பட்டுள்ளது.

## மகா கும்பாபிஷேக கிரியைகள் ஆரம்பம்

**( வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனை நற்பிட்டிமுனை கந்தசுவாமி ஆலயத்தின் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக ஆரம்பக் கிரியைகள் நேற்று (18) வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

எதிர்வரும் 22 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை எண் ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு இடம் பெறும்.

தொடர்ந்து மறுநாள் 23ஆம் திகதி மகா கும்பாபிஷே கம் இடம் பெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தனர்.

## கல்முனை மஹ்மூத் மகளிர் தலைவிகள் சத்தியப் பிரமாணம்



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி ஒழுக்காற்று சபையால் ஏற்பாடு செய்யப்பட்ட மூன்று தலைமை மாணவ தலைவிகளுக்கான சத்தியப்பிரமாணம் மற்றும் சின்னம் சூட்டும் நிகழ்வு அண்மையில் பாடசாலையின் ஒழுக் காற்று சபையின் தலைவர் எம்.சீ. அலியார் மற்றும் பிரதி தலைவர் ஏ. கலீலுல் ரஹ்மான் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்முனை வலய கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.எச்.எம். ஜாபிர் மற்றும் கல்லூரியின் அதிபர் யூ.எல்.எம். அமீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஆசிரியர்களை மதிக்கின்ற நிலைமையை மாணவர் உருவாக்கிக் கொள்ள வேண்டும்

## அக்கரைப்பற்றில் நீதிபதி ஹம்ஸா தெரிவிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் மாணவர்களை நோக்கி காழ்ப்புணர்வு கொண்ட வன்முறைகளை ஒருபோதும் பிரயோகிப்பதில்லை. அதனால் ஆசிரியர்களை மதிக்கின்ற நிலைமையை மாணவர்கள் உருவாக்கிக் கொள்ள வேண்டும் .

இவ்வாறு நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா தெரிவித்தார்.

அக்கரைப்பற்று வலய, ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் நிகழ்வு நேற்று முன்தினம் (17) பாடசாலையின் அதிபர் அஷ்ஷெய்க் யு.கே.அப்துர் ரஹீம் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று மாவட்ட மற்றும் நீதிவான் நீதிமன்றத்தின் நீதிபதி எம்.எச்.எம்.ஹம்ஸா பிரதம அதிதியாக கலந்து கொண்டதுடன் ஞாபகார்த்தமாக, பாடசாலையில் மரக்கன்றுகளை நட்டுவைத்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர் எம்.ஏ.கமறுந் நிஸா, உதவி அதிபர்களான எம்.எச்.மஹ்மூத் நஸீம், கே.எல்.எம்.சமீன், ஏ.ஜே.எம்.றினீஸ் ஆகியோருடன் வலய தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் நீதிபதி தொடர்ந்து உரையாற்றும்போது-

மாணவச் செல்வங்கள் என்று விழிப்பதற்கு காரணம் மாணவர்கள் செல்வங்களாவர். நாட்டின் சொத்துக்கள் இந்த மாணவச் செல்வங்களே. இவர்கள் தொடர்பாக நான் அடிக்கடி கவலை கொள்கின்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

போதைப்பொருள் தொடர்பாக மாணவர்களாகிய உங்களுக்கு மத்தியில் சில விடயங்களை முன் வைக்கலாம் என நினைக்கிறேன்.

இந்த மாணவச் செல்வங்களுக்கு நல்ல விடயங்களைப் பற்றி எவ்வாறு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற பல்வேறுபட்ட விடயங்களை பற்றி யோசித்திருக்கின்றேன் . இருந்த போதும் வெவ்வேறுபட்ட நபர்களை வளவாளர்களாக கொண்டு இந்த விடயங்களை கூறினாலும் நேரடியாக ஒரு நீதிபதி கூறுவது சாலப் பொருத்தமாக இருக்கும் என நினைக்கின்றேன்.

குறிப்பாக ஒலுவில் அல்-ஹம்றா மகா வித்தியாலய மாணவர்களுக்கு பல விடயங்களை, நல்லுபதேசங்கள் கூறி இதில் ஒரு சிலராவது அந்த விடயத்தை ஏற்று நடந்தால் என்னுடைய மேய்ப்பாளர்கள் என்ற கடமையிலிருந்து நான் இறைவனிடத்தில் பூரணத்துவம் அடைந்தவனாக எண்ணிக் கொள்ள முடியும் என நான் நம்புகின்றேன்.

அண்மைக் காலமாகச் சிறுவர்கள் மத்தியிலும் மாணவர்கள் மத்தியிலும் போதைப்பொருள் பாவனை மட்டுமல்லாது போதைப்பொருள் விற்பனையாளர்களாக மாணவர்கள் மாறி இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலை எமது பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கின்றது.



இது ஆரோக்கியமான விடயமல்ல. இந்த போதைப் பொருள் மாபியாக்கள் என்போர் ஒரு சாதாரண மாபியாக்களாக அல்லாமல் சர்வதேச வலைப்பின்னல் ஊடாக இயங்கி வருகின்ற, மாணவர்களை நோக்கி அவர்களின் இலட்சியங்களை அழிப்பதற்காக செயற்பட்டு வரும் பல வலைப் பின்னல்களின் கூட்டிணைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும்.

போதை மாபியாக்கள் தங்கள் வியாபாரத்தை மிக இலகுவாக செய்து முடிக்க வேண்டும் என்பதற்காக கங்கணம் கட்டி செயற்பட்டு வருகின்றார்கள் என்பதை நினைத்து நான் பல சந்தர்ப்பங்களில் மன வேதனை அடைந்திருக்கின்றேன்.

இது ஒரு சாதாரணமான விடயம் அல்ல, மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய ஒன்றாகும். இதனை உங்களிடம் நான் ஏன் கூறுகின்றேன் என்றால் இதனை நீங்கள் செய்து கொண்டிருக்கின்றீர்கள் என்பதற்காக அல்ல, தற்பொழுது நீங்களே இலக்கு வைக்கப்பட்ட குழுக்களாக இருந்து கொண்டிக்கின்றீர்கள். அதனால் என்றைக்கோ ஒரு நாள் நீங்களும் இந்த சிக்கலுக்குள் மாட்டிக் கொள்ளும் சந்தர்ப்பங்கள் மிகவும் அதிகமாக இருந்து கொண்டிருக்கின்றன என்ற உண்மையை நான் கூறி வைக்கின்றேன்.

உங்களுடைய வயது ஆலோசனை கூறுபவர்களை எதிரியாக பார்க்கின்ற ஒரு வயதாகும். அதனால் சில சந்தர்ப்பங்களில் சில மாணவர்கள் ஆசிரியர்களை எதிரிகளாகப் பார்த்துக் கொண்டிருக்கின்றீர்கள்.

நீதிபதியாக உங்கள் முன் பேசிக் கொண்டிருக்கும் நான், தற்பொழுது எனது மாணவப்பருவத்தை எண்ணிப் பார்க்கின்றேன். சுவாரசியமாக துள்ளித் திரிந்து விளையாடிய அந்த காலத்தை மீட்டுக் கொள்கின்றேன்.

உண்மையிலேயே அந்த காலத்தில் வறுமையுடன் கூடிய பல கசப்பான அனுபவங்களை சந்தித்திருந்தாலும் ஆசிரியர் மாணவர் என்ற உறவு மிகச் சிறப்புமிக்கதாக காணப்பட்டது.

நான் இப்பொழுதும் எனக்கு கற்பித்த ஆசிரியர்களை காண்கின்ற போது உளத் தூய்மையுடன் மரியாதை செலுத்துகின்ற வழக்கமுடையவனாக இருந்து வருகிறேன்.

இன்று நிலைமை வேறாக இருக்கின்றது. ஆசிரியர்களை மதிக்காத, ஆசிரியர்களை தாக்கும் அளவுக்கு பிற்போக்கான நிலைமை இன்று உருவாகி இருக்கின்றது. இது ஒரு ஆரோக்கிய சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அம்சமாக கொள்ளமுடியாது.

இவ்வாறு ஆசிரியர்கள் தாக்கப்படுவதும் பல்வேறு வகையான துன்பங்களுக்கு ஆளாகும் நிலைமைகளையும் நாளாந்தம் எம்மால் காணக்கூடியதாக உள்ளது. இதற்கு முக்கிய காரணம் நாங்களாகவே உருவாக்கிய சூழ்நிலைகளே ஆகும்.



எனவேதான் அன்புக்குரிய மாணவர்களே, நீங்கள் ஆசிரியர்களுக்கு மதிப்பளித்து ஒழுக்க விழுமியங்களில் மேலோங்கி நடப்பீர்களேயானால், உங்களது சிப்பான இலட்சியங்களை இலகுவாக அடைந்து கொள்ள முடியும் என்ற விடயத்தை எனது சொந்த அனுபவத்திலிருந்து சுட்டிக்காட்டுகின்றேன். - என்றார்.

# "உதிரம் கொடுப்போம்; மனிதம் காப்போம்" கம்பளையில் இரத்ததான முகாம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

கம்பளை பிரதேச வைத்திய சாலைகளில் நிலவும் குருதி தட்டுப் பாட்டைக் கருத்தில் கொண்டும், இனங் களுக்கிடையில் நல்லுறவை மேம்படுத் தும் வகையிலும், மனிதத்தை பேணும் வகையிலும் கம்பளை கிறிக்கட் லீக் ஒழுங்கு செய்திருந்த இரத்ததான முகாம் அண்மையில் கஹடப்பிட்டிய ஜும்ஆ மஸ்ஜித் திருமண மண்டபத்தில் இடம்பெற்றது.

உதிரம் கொடுப்போம் மனிதம் காப் போம் எனும் கருப்பொருளில் அமைந்த இந்த இரத்ததான முகாமில் ஆண், பெண் வேறுபாடின்றி பலரும் கலந்து கொண்டு குருதிக் கொடை செய்தனர்.

கம்பளைகிறிக்கட்லீக்கின் ஒருதசாப்த கால நிறைவை முன்னிட்டு ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் வைத் தியர்கள், தாதி உத்தியோஸ்தர்கள், குருதிக் கொடையாளிகள் மற்றும் கிறிக்கட் லீக் உறுப்பினர்கள் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தனர்.

## தங்க ஜெல் கரைசலை 3கப்ஸியூல்களில் மலவாசலில் வைத்துக் கடத்தியவர் கைது



இந்தியாவின் மும்பைக்கு செல்வ தற்காக கட்டுநாயக்க விமான நிலை யத்துக்கு வந்த ஓட்டோச் சாரதி ஒருவர் சுங்க போதைப்பொருள் கட்டுப் பாட்டுப் பிரிவின் அதிகாரிகளால் நேற்று வெள்ளிக்கிழமை கைதுசெய் யப்பட்டுள்ளார்.

சுமார் 2 கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஜெல் கரை சல் அடங்கிய 03 கப்ஸியூல்களை கடத்திச் செல்லும்போதே இந்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் கொழும்பு வாழைத் தோட்டத்தைச் சேர்ந்த 29 வயதான ஓட்டோச் சாரதியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை மாலை 04.05 மணியளவில் இந்தியாவின் மும்பைக் குச் செல்லவிருந்த விமானத்தில் செல் வதற்கு குறித்த நபர் அங்கு வந்தி ருந்தபோது, அவர் மீதான சந்தேகத் தின் அடிப்படையில், சோதனைகளை மேற்கொண்டபோது அவரது மல வாசலில் ஒரு கிலோ 280 கிராம் நிறையுள்ள தங்க ஜெல் கரைசல் அடங்கிய 3 கப்ஸியூல்கள் இருந் தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இந்தத் தங்க ஜெல் கரைசலை தங்கமாக மாற்றும் தொழில்நுட்பம் தற்போது இந்தியாவில் மட்டுமே உள்ளதாக சுங்க போதைப்பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் தெரிவித் தனர்.

தங்க ஜெல் கரைசல் அடங்கிய கப்ஸியூல்கள் மேலதிக விசாரணைக் காக கட்டுநாயக்க விமான நிலைய சுங்க வளாகத்தில் உள்ள இரத்தினக் கல் மற்றும் ஆபரண அலுவலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன் கைதுசெய்யப்பட்ட நபர் இன்றைய தினம் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வரலாறு பாட கண்காட்சி!



(பழுவூரான்)

பட்டிருப்பு கல்வி வலயத்துக்கு உட்பட்ட பெரிய கல்லாறு உதயபுரம் தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலையின் அதிபர் சசிகாந்தன் தலைமையில் வர லாறு பாட கண்காட்சி நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை (17) இடம்பெற்றது .

தரம் 6 தொடக்கம் 11 வரையான மாணவர்களின் வரலாறு பாட இயக் கங்களை சிறப்பாக வடிவமைத்து இதன் போது காட்சிப்படுத்தப்பட்டன.

இந்த நிகழ்வில் பாடசாலையின் முன்னாள் அதிபர் சசிதரன் , பாடசாலை பிரதி அதிபர் சுதாகரன், பாடசாலையின் அபிவிருத்தி சங்க செயலாளர் கணேச லிங்கம் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர் .

இக் கண்காட்சியை சிறப்பாக ஒழுங் கமைத்த விஞ்ஞான பாட இணைப்பா ளர் ஆசிரியர் திருமதி சிவநேசன் கயல்விழி பாடசாலை சமூகத்தால் பாராட்டப்பட்டார்.







# பாடகர் ஹரிஹரன் இலங்கை வருகை!

பிரபல இந்திய திரைப்பட பின்னணி பாடகர் ஹரிஹரன் இலங்கை வந்துள்ளார்.

கொழும்பில் இன்று நடைபெறவுள்ள இசை நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்வதற்காகவே அவர் வருகை வந்துள்ளார்.

பாடகர் ஹரிஹரனுடன் தென்னிந்திய தொலைக்காட்சி பிரபலங்களான மா.கா.பா.ஆனந்த், சிவாங்கி ஆகியோரும் வருகை வந்துள்ளார்.

இலங்கையை வந்தடைந்த இவர்கள், ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான பணியாளர்களுடன் படம் எடுத்துக் கொண்டனர். ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இந்தப் படங்களை முகநூல் பக்கத்தில் பதிவிட்டுள்ளது.



# மக்களவைத் தேர்தலில் ராகுல் காந்தி அமேதி தொகுதியில் போட்டியிடுவார்!

## - உத்தரப் பிரதேச மாநில காங்கிரஸ் தலைவர் தெரிவிப்பு



எதிர்வரும் மக்களவைத் தேர்தலில் ராகுல் காந்தி அமேதி தொகுதியில் இருந்து போட்டியிடுவார் என்று உத்தரப் பிரதேச மாநில காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அஜய் ராய் தெரிவித்துள்ளார்.

அதேபோல் வாரணாசியில் போட்டியிட பிரியங்கா காந்தி முடிவு செய்தால் அவருக்கு காங்கிரஸின் ஒவ்வொரு தொண்டரும் முழுமையாக ஒத்துழைப்பார்கள் என்றும் அவர் தெரிவசித்துள்ளார்.

உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவராகப் பொறுப்பேற்றுக் கொண்ட அஜய் ராய்க்கு வாரணாசியில் காங்கிரஸ் தொண்டர்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

அப்போது அவர், பிரதமர் நரேந்திர மோடிக்கும் பா.ஜ.கவுக்கும் எதிராக வாரணாசியில் தொடங்கிய அரசியல் போட்டி மாநிலத்தின் ஒவ்வொரு கிராமத்துக்கும் எடுத்துச் செல்லப்படும் என்று தெரிவித்துள்ளார்.

கடந்த மக்களவைத் தேர்தலில் பிரதமருக்கு எதிராகப் போட்டியிட்டதற்காக உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவர் பதவி கொடுக்கப்பட்டதா என எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த அவர், நான் ராகுல் காந்தியின் சிப்பாய். அதனால்தான் எனக்கு இந்தப் பதவி கொடுக்கப்பட்டுள்ளது. இது எனது தொடர் போராட்டத்துக்குக் கிடைத்த வெற்றி.

ஆளும் பா.ஜ.கவின் பல்வேறு பிரச்சினைகளை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்ததால் என் மீது வழக்குகள் பாய்ந்தன. தேசிய பாதுகாப்புச் சட்டம் என் மீது பாய்ந்தது. அத்தனையையும் கடந்து நான் ராகுல் காந்தியின் சிப்பாயியாக இன்று இப்பதவிக்கு வந்துள்ளேன். இனி உத்தரப் பிரதேசத்தின் கிழக்கே உள்ள சண்டவுலி முதல் மேற்கே உள்ள காசியாபாத் வரை காங்கிரஸ் தொண்டர்கள் என்னுடன் இணைந்து பா.ஜ.கவுக்கு எதிராகப் போராடுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.

# காவிரியிலிருந்து தமிழகத்துக்கு 22 ஆயிரம் கனஅடி நீர் திறப்பு

## - விவசாய அமைப்பினர் ஆற்றில் இறங்கி போராட்டம்

கர்நாடக அரசு காவிரி ஆற்றிலிருந்து தமிழகத்துக்கு விநாடிக்கு 22 ஆயிரம் கன அடி நீரை திறந்துவிட்டுள்ளது.

உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி தமிழகத்துக்கு வழங்க வேண்டிய 37.9 டி.எம்.சி. (ஒரு டி.எம்.சி. என்பது ஆயிரம் மில்லியன் கன அடி ஆகும்) நிலுவை நீரை வழங்குமாறு காவிரி மேலாண்மை ஆணையம் கர்நாடகாவுக்கு உத்தரவிட்டது. இதனிடையே தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் கர்நாடகாவுக்கு எதிராக வழக்கு தொடுத்தது. இதையடுத்து கர்நாடக அரசு தமிழகத்துக்கு 10 டி.எம்.சி. நீரை திறந்துவிட உத்தரவிட்டது.

இதற்கு பா.ஜ.க. மூத்த தலைவரும் முன்னாள் முதல்வருமான பசவராஜ் பொம்மை கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் கூறுகையில், கர்நாடகாவில் மழைபற்றாக்குறையால் இங்குள்ள விவசாயிகளுக்கே இன்னும் நீர் திறக்கப்படவில்லை. ஆனால் தமிழகத்துக்கு காவிரி நீர் திறந்துவிட்டுள்ளது. காங்கிரஸ் அரசு கர்நாடக விவசாயிகளின் நலனை பாதுகாக்க தவறிவிட்டது. தமிழகத்துக்கு திறக்கப்பட்டிருக்கும் நீரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

மதச்சார்பற்ற ஜனதா தளத்தின் மூத்த தலைவரும் முன்னாள் முதல்வருமான குமாரசாமி கூறுகையில், கர்நாடக அரசுக்கு கர்நாடக விவசாயிகளின் நலனில் அக்கறை இல்லை. காங்கிரஸ் கூட்டணியில் இருக்கும் திமுக தமிழகத்தில் ஆளும் கட்சியாக உள்ளது. அவர்களை மகிழ்விப்பதற்காகவே கர்நாடகாவை ஆளும் காங்கிரஸ் அரசு காவிரியில் நீர் திறந்துவிட்டுள்ளது.

கர்நாடக அரசு நீரை திறக்காவிடில் அவர்களின் இண்டியா கூட்டணியில் குழப்பம் வரும். கர்நாடக விவசாயிகளுக்கு துரோகம் இழைத்த காங்கிரஸ்"க்கு தக்க பாடம் கற்பிக்கப்படும் என கண்டித்துள்ளார்.

இதேவேளை, தமிழகத்துக்கு நீர் திறக்கப்பட்டதை கண்டித்து கர்நாடக விவசாய அமைப்பினர் நேற்று ஸ்ரீரங்கப்பட்டணா அருகே காவிரி ஆற்றில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது கர்நாடக அணைகளில் போதிய நீர் இல்லாத நிலையில் தமிழகத்துக்கு நீரை திறக்கக்கூடாது. இந்த விவகாரத்தில் காங்கிரஸ் அரசு கர்நாடக விவசாயிகளுக்கு துரோகம் இழைத்துவிட்டது என அவர்கள் குற்றம் சாட்டினர்.

# உலகுக்கு இந்தியா தலைமை தாங்கும்: தமிழிசை கருத்து

புதுச்சேரி அரசு கலை, பண்பாட்டுத்துறை சார்பில் 'என் மண் என் தேசம்' இயக்கத்தின் ஒருபகுதியாக அமுத மண் கலச ஊர்வலம் மற்றும் மரம் நடும் விழா புதுச்சேரி கடற்கரைச் சாலை காந்தி திடலில் நேற்று நடைபெற்றது.

ஆளுநர் தமிழிசை சவுந்தரராஜன் இந்த நிகழ்ச்சியினைத் தொடங்கி வைத்து உரையாற்றுகையில், சந்திர மண்டலத்தில் கண்டு தெளிவோம் என்ற பாரதியின் கூற்றுக்கிணங்க இன்று இந்தியாவின் சந்திராயன் நிலவை நெருங்கி விட்டது நமக்கு பெருமை சேர்த்திருக்கிறது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடி முக்கிய காரணம் என்பதை மறுக்க முடியாது.

பிரதமர் தனது ஒவ்வொரு நொடியையும் இந்தியாவை முன்னேற்றமடைய சிந்திக்கிறார். இந்த நாடு பாதுகாக்கப்பட வேண்டும் என்று பல திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2047ஆம் ஆண்டுக்குள், நூறாவது சுதந்திர தினத்தை கொண்டாடும் போது உலகிற்கு தலைமை தாங்கும் பெருமையை இந்தியா பெறப்போகிறது. இதற்கு இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் சான்று என்று தெரிவித்துள்ளார்.

# எப் - 16 விமானங்களை உக்ரைனுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்புதல்!





டென்மார்க் மற்றும் நெதர்லாந்தில் இருந்து அமெரிக்கத் தயாரிப்பான எப்-16 ரக போர் விமானங்களை உக்ரைனுக்கு வழங்குவதற்கு அமெரிக்கா ஒப்புதல் அளித்துள்ளது.

உக்ரைன் விமானிகள் குறித்த போர் விமானங்களை இயக்குவதற்கு முழுமையாக பயிற்சி பெற்ற பின்னர் அவற்றை உக்ரைனுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் உக்ரைன் அதன் புதிய திறன்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என அமெரிக்க வெளியுறவுத் துறை பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

எனினும் ரஷ்யாவின் தாக்குதலை எதிர்ப்பதற்காக உக்ரைன் எப்-16 ரக போர் விமானங்களை பயன்படுத்துவதற்கு சில மாதங்கள் ஆகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

நெதர்லாந்தில் சுமார் 24 எப்-16 ரக போர் விமானங்கள் உள்ளதுடன் டென்மார்க் தங்களிடம் உள்ள 30 எப்-16 ரக விமானங்களை மேம்படுத்தவும் திட்டமிட்டுள்ளது.

அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் முன்னதாக உக்ரைனுக்கு குறித்த போர் விமானங்களை வழங்குவதை நிராகரித்திருந்தன.

இது அணுவாயுதம் ஏந்திய ரஷ்யாவுடனான போரை மேலும் தீவிரமடைய வழிவகுக்கும் என அறிவிக் கப்பட்டிருந்தமை குறிப்பிடத் தக்கது.

## ரஷ்யாவும் சீனாவும் இராணுவப் பயிற்சி!





ரஷ்யா மற்றும் சீன போர்க் கப்பல்கள் பசிபிக் பெருங்கடலில் கூட்டு இராணுவ பயிற்சியை ஆரம் பித்துள்ளன.

இரு இராணுவ தரப்பினரும் கடல் கண்காணிப்பு, மீட்பு நடவடிக்கைகள் மற்றும் வான்வழி தாக்குதல்களை எதிர்கொள்வதில் பயிற்சி பெறுவார்கள் என்று ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் அறிவித்துள்ளது.

ரஷ்ய அரச செய்தி சேவை வெளியிட்டுள்ள காணொளியில், பிரமாண்டமான போர்க்கப்பல்கள் வைர வடிவில் பயணிப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

## லிபியாவில் ஆயுதக்குழுக்களிடையே இடம்பெற்ற மோதலில் 45 பேர் பலி!



வட ஆப்பிரிக்க நாடான லிபியாவில் ஆயுதக் குழுக்களுக்கு இடையே இடம் பெற்ற மோதல் காரணமாக எண் ணிக்கை 40 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர்.


லிபியா தலைநகர் திரிபோலியில் 444 ஆம் படைப் பிரிவைச் சேர்ந்தவர் களுக்கும், சிறப்பு தற்காப்புப் படையின ருக்கும் இடையே கடந்த 15 ஆம் திகதி முதல் நடைபெற்று வரும் மோதலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளது.

இது தவிர, இந்த சண்டையில் சிக்கி 146 பேர் காயமடைந்துள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். எனினும், உயிரிழந்தவர்களில் ஆயுதக் குழுவைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர், பொதுமக்கள் எத்தனை பேர் என்ற விவரம் வெளியிடப்படப்படவில்லை.

444 ஆம் படைப் பிரிவு தளபதி முகமது ஹம்ஸாவை சிறப்பு தற்காப்புப் படையினர் திரிபோலி விமான நிலை யத்தில் கைது செய்துள்ளனர் என தகவல் வெளியானதைத் தொடர்ந்து இரு குழுவினருக்கும் இடையே மோதல் இடம்பெற்று வருகிறது.

லிபியாவை 40 ஆண்டுகளுக்கு மேல் ஆண்டு வந்த அல்-கடாபியின் ஆட்சியை, அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளின் உதவியுடன் கிளர்ச்சிப் படையினர் கடந்த 2011 ஆம் ஆண்டு முறியடித்தனர்.

அதற்குப் பிம்மர் அந்த நாட்டில் பல்வேறு ஆயுதக் குழுக்களும் தங்களுக்குள் தொடர்ந்து மோதலில் ஈடுபட்டு வருகின்றன என்பது குறிப் பிடத்தக்கது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949